# 80 டன் பட்டாசு கழிவு சென்னையில் அகற்றம்

**சென்னை, அக். 20–**

சென்னையில், தீபாவளி பண்டிகைக்காக வெடிக்கப்பட்ட பட்டாசுகளின் கழிவு, 80 டன் அளவிற்கு அகற்றப்பட்டதாக மாநகராட்சி தெரிவித்து உள்ளது.

இது குறித்து, மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், நாள் ஒன்றுக்கு, 5,300 டன் குப்பை அகற்றப்படுகின்றன. இதற்கான துப்புரவு பணியில், 19 ஆயிரம் ஊழியர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, சென்னை மாநகரம் முழுவதும் பட்டாசுகள் வெடிக்கப்பட்டு, சாலைகளில் குவிந்து கிடந்த குப்பையை, மாநகராட்சி ஊழியர்கள் அகற்றினர்.

**அம்பத்தூர் மண்டலத்தில், அதிகபட்சமாக, 12.69 டன் குப்பையும்; குறைந்தபட்சமாக, அண்ணாநகரில், 1 டன் குப்பையும் சேகரிக்கப்பட்டது**

இதில், பட்டாசு காகிதங்கள் மற்றும் குப்பைகள் மட்டும், 80 டன் அளவிற்கு அகற்றப்பட்டன. அம்பத்தூர் மண்டலத்தில், அதிகபட்சமாக, 12.69 டன் குப்பையும்; குறைந்தபட்சமாக, அண்ணாநகரில், 1 டன் குப்பையும் சேகரிக்கப்பட்டது.

இந்த குப்பை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிவுரையின் படி, கும்மிடிப்பூண்டி அருகே உள்ள அபாயகரமான கழிவுகளை சேகரிக்கக்கூடிய தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த குப்பை, பாதுகாப்பாக அழிக்கப்படும்.

கடந்த ஆயுதபூஜையின் போது, மாநகராட்சி, 420 டன் குப்பையை, கூடுதலாக அகற்றியது. புதன் கிழமைகளில் மட்டும், மக்காத குப்பையை, மாநகராட்சி பெறுகிறது; மற்ற தினங்களில், மக்கும் குப்பைகள் பெறப்படுகின்றன.

பொதுமக்கள் தாங்களே குப்பைகளை பிரித்து வழங்கினால், துப்புரவு பணியாளர்களின் கூடுதல் சுமையை தவிர்க்க முடியும்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.